### ஐசொனியசிட் (Isoniazid):

ஐசொனியசிட் எடுப்பதற்கு முன்னால்,

- உங்களுக்கு சிறுநீரக நோய், நீரிழிவு நோய், வலிப்பு நோய், கை,கால் விரல்களில் வலி மற்றும் சிலிர்ப்பு அல்லது எரிச்சல் இருந்தால், அல்லது முன்பு இருந்திருந்தால், அதை மருத்துவரிடம் தெரிவியுங்கள்.
- இந்த மருந்து எடுக்கும்போது மது பானங்கள் அருந்தக் கூடாது என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

### ரி.ஃ.பம்பிஸின் (Rifampicin):

ரி.ஃ.பம்பிஸின் எடுப்பதற்கு முன்னால்,

- இந்த மருந்து கருத்தடை மாத்திரைகளை செயல் இழக்கச் செய்யும் என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும். எனவே, இந்த மருந்தை எடுக்கும்போது வேறு கருத்தடை முறையைப் பின்பற்றுங்கள். இது குறித்து உங்கள் மருத்துவரிடம் அல்லது மருந்தாளுனரிடம் ஆலோசனை கேளுங்கள்.
- இந்த மருந்தினால் சிறுநீர், மலம், எச்சில், தொண்டைச் சளி, வேர்வை, கண்ணீர் ஆகியவை சிவப்பு-ஆரஞ்சு நிறத்திலிருந்து சிவப்பு-பழுப்பு நிறத்திற்கு மாறலாம். உங்களின் மென் கண் ஒட்டுவில்லை (soft contact lenses) நிரந்தரமாக நிறம் மாறிவிடலாம். சாதாரண சுத்திகரிப்பு கரைசல்களால் அதை நீக்க இயலாது. எனவே, இந்த மருந்து எடுக்கும்போது இவற்றை அணியாமல் இருப்பது நல்லது. மருந்தை நிறுத்தியதும் இது வழக்கத்திற்குத் திரும்பிவிடும். கடின கண் ஒட்டுவில்லைகள் இந்த மருந்தினால் நிறம் மாறமாட்டா.
- இந்த மருந்து உங்களை மந்தமாக்கலாம் என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும். மருந்து உங்களை எப்படிப் பாதிக்கும் என்பதை அறிந்து கொள்ளும்வரை வாகனம் ஓட்டாதீர்கள் மற்றும் இயந்திரம் இயக்காதீர்கள்.

### எதம்புடோல் (Ethambutol):

எதம்புடோல் எடுப்பதற்கு முன்னால்,

- சிறுநீரக நோய், மூட்டு வீக்கம் அல்லது, கண்புரை (cataract) போன்ற கண் கோளாறுகள் இருந்தால், அல்லது இதற்கு முன்பு இருந்திருந்தால், மருத்துவரிடம் தெரிவியுங்கள்.
- மருந்து எடுக்கும்போது, பார்வை மங்குதல், கண் வலி, சிவப்பு-பச்சை நிறக் குருடு அல்லது பார்வை இழப்பு ஏற்பட்டால், மருத்துவரை உடனே சென்று பார்க்க வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

## மருந்தை நான் எப்படிப் **பாதுகாக்க** வேண்டும்?

மருந்தை ஒரு குளிர்ச்சியான, உலர்ந்த இடத்தில் வைத்திருங்கள். மருந்தின்மீது ஈரம், வெப்பம், நேரடி வெளிச்சம் படாதவாறு பார்த்துக் கொள்ளுங்கள்.



MINISTRY OF HEALTH
SINGAPORE

National Healthcare Group · NUH National University Hospital · Alexandra Health · Eastern Health Alliance · Jurong Health · SingHealth

SINGHEALTH / PIL / T81R0

நோயாளி தகவல் கையேடு

# காச நோய்க்கான மருந்துகள்

## (ANTI-TUBERCULOSIS)

ரி.ஃ.பம்பிஸின் (Rifampicin)
ஐசொனியசிட் (Isoniazid)
பைரசினமைட் (Pyrazinamide)
எதம்புடோல் (Ethambutol)

## உங்கள் மருந்து **பற்றிய** தகவல்

ரி.ஃபம்பிஸின் (Rifampicin), ஐசொனியசிட் (Isoniazid), பைரசினமைட் (Pyrazinamide) மற்றும் எதம்புடோல் (Ethambutol) ஆகியவை காச நோய் மருந்துகளுக்கு சில உதாரணங்கள். இவை காச நோயை உண்டாக்கும் நுண்ணுயிர்களைக் கொல்லக் கூடியவை அல்லது அவற்றை வளரவிடாமல் தடுக்கக் கூடியவை. காச நோயை முழுமையாகக் குணப்படுத்த, இம்மருந்துகளில் பலவற்றை ஒரே நேரத்தில் எடுத்துக் கொள்ளத் தேவைப்படும்.

## மருந்தை நான் **எப்படி** உட்கொள்ள வேண்டும்?

### பைரசினமைட் (Pyrazinamide)

இது வாய்வழி உட்கொள்ளும் மாத்திரை வடிவத்தில் வருகிறது. வழக்கமாக இதை ஒரு நாளில் ஒரு தடவை உட்கொள்ள வேண்டும் (ஒவ்வொரு நாளும் அதே நேரத்தில்). இம்மருந்தை உணவுடனோ அல்லது வெறும் வயிற்றிலோ எடுக்கலாம்.

### ஐசொனியசிட் (Isoniazid)

இது வாய்வழி உட்கொள்ளும் மாத்திரை வடிவத்தில் வருகிறது. வழக்கமாக இதை ஒரு நாளில் ஒரு தடவை உட்கொள்ள வேண்டும் (ஒவ்வொரு நாளும் அதே நேரத்தில்). இம்மருந்தை வெறும் வயிற்றில் எடுக்க வேண்டும்.

ஐசொனியசிட் ஏற்படுத்தக்கூடிய சில பக்க-விளைவுகளைத் தடுக்க அல்லது குறைக்க, பைரிடோக்ஸின் (வைட்டமின் ற6) என்பதையும் மருத்துவர் உங்களை எடுத்துக் கொள்ளச் சொல்லலாம். அதற்குத் தேவை இருந்தால், ஒவ்வொரு நாளும் ஐசொனியசிட் மருந்தோடு பைரிடோக்ஸின் மருந்தையும் நீங்கள் கண்டிப்பாக எடுத்துக் கொள்வது முக்கியம். எந்த வேளை மருந்தையும் தவற விடாதீர்கள்.

### ரி.ஃபம்பிஸின் (Rifampicin)

இது வாய்வழி உட்கொள்ளும் குழல் மாத்திரை வடிவத்தில் வருகிறது. வழக்கமாக இதை ஒரு நாளில் ஒரு தடவை உட்கொள்ள வேண்டும். இம்மருந்தை வெறும் வயிற்றில் எடுக்க வேண்டும்

### எதம்புடோல் (Ethambutol)

இது வாய்வழி உட்கொள்ளும் மாத்திரை வடிவத்தில் வருகிறது. வழக்கமாக இதை ஒரு நாளில் ஒரு தடவை காலையில் உட்கொள்ள வேண்டும் இம்மருந்தை உணவுடனோ அல்லது வெறும் வயிற்றிலோ எடுக்கலாம்.

மேற்கூறிய இந்த ஆன்டிபயோடிக் மருந்துகளை நீங்கள் குறைந்தது 6 மாதங்களுக்கு எடுக்க வேண்டியிருக்கும். நோய் குணமாக ஆரம்பித்தாலும், உங்களின் காச நோய் முழுமையாக குணமாவதற்கு இவற்றை நீங்கள் தொடர்ந்து எடுத்து முடிக்க வேண்டும். பாதியிலேயே நிறுத்தினால் நுண்ணுயிர்த்தொற்று மீண்டும் ஏற்படலாம் அல்லது மருந்துகளுக்கு எதிர்ப்பு உருவாகலாம். அதோடு, மருந்துகளை வேளை தவறாமல் எடுத்து வருவதும் முக்கியம்

மருந்துகளை எப்போதும் பிள்ளைகளின் கைகளுக்கு எட்டாத இடத்தில் வைத்திருங்கள
காலாவதியான அல்லது இனிமேல் தேவைப்படாத மருந்துகளை வீசிவிடுங்கள

## மருந்து உட்கொள்ள **மறந்துவிட்டால்** என்ன செய்வது?

எடுக்கத் தவறிய மருந்தை ஞாபகம் வந்த உடனேயே உட்கொள்ளுங்கள். எனினும், அப்போது அடுத்த வேளைக்கான நேரம் நெருங்கிவிட்டால், முதலில் எடுக்கத் தவறிய மருந்தை விட்டுவிட்டு, அடுத்த வேளை வரை காத்திருங்கள். ஒரு வேளையில் இரண்டு மடங்கு மருந்து உட்கொள்ளாதீர்கள்.

## மருந்து ஏற்படுத்தக்கூடிய **பக்க-விளைவுகள்** யாவை?

தோல் தடிப்புகள், மூட்டு அல்லது தசை நாண் (tendon) வலி அல்லது அழற்சி, முகம் வீங்குதல் அல்லது மூச்சு விடச் சிரமப்படுதல் போன்ற பாதிப்புகள் ஏற்பட்டால் உடனே மருத்துவரிடம் செல்லுங்கள்.

பின்வரும் பக்க-விளைவுகள் இருந்தால் மருத்துவரிடம் சோதித்துக் கொள்ளுங்கள்.

### பைரசினமைட் (Pyrazinamide):

அவை ஏற்படலாம். பின்வரும் பாதிப்புகள் கடுமையாகவும் நீங்காமலும் இருந்தால் மருத்துவரிடம் கூறுங்கள்:

- வயிற்றுக் கோளாறு
- அதிக களைப்பு

பின்வரும் பாதிப்புகள் இருந்தால், மருத்துவரை உடனே அழையுங்கள்:

- வாந்தி
- தோல் அல்லது கண்கள் மஞ்சள் நிறமாகுதல்
- சிறுநீர் கருநிறமாகுதல்
- மூட்டுகளில் வலியும் வீக்கமும் ஏற்படுதல்

### ஐசொனியசிட் (Isoniazid):

ஐசொனியசிட் பொதுவாக பக்க-விளைவுகளை ஏற்படுத்தாது என்றாலும், சில வேளைகளில் அவை ஏற்படலாம். பின்வரும் பாதிப்புகள் கடுமையாகவும் நீங்காமலும் இருந்தால் மருத்துவரிடம் கூறுங்கள்:

- வயிற்றுப் போக்கு
- கண் பார்வை பிரச்சனைகள்

பின்வரும் பாதிப்புகள் இருந்தால், மருத்துவரை உடனே அழையுங்கள்:

- கை, கால்கள் மரத்தல் அல்லது சிலிர்த்தல்
- சுரப்பிகள் வீங்குதல்
- தொண்டைப் புண்
- வழக்கமில்லாத இரத்தப்போக்கு அல்லது காயங்கள்
- வயிற்று வலி அல்லது வயிறு தொடுவதற்கு மென்மையாக உணர்தல்

### ரி.ஃபம்பிஸின் (Rifampicin):

ரி.ஃபம்பிஸின் பொதுவாக பக்க-விளைவுகளை ஏற்படுத்தாது என்றாலும், சில வேளைகளில் அவை ஏற்படலாம். உங்களின் சிறுநீர், மலம், எச்சில், தொண்டைச் சளி, வேர்வை மற்றும் கண்ணீர் ஆகியவை சிவப்பு-ஆரஞ்சு நிறமாக மாறலாம். இது தீங்கு தராது. எனினும், பின்வரும் பாதிப்புகள் கடுமையாகவும் நீங்காமலும் இருந்தால் மருத்துவரிடம் கூறுங்கள்:

- தலைவலி
- தசை அல்லது எலும்பு வலி
- வாந்தி
- குளிர் நடுக்கம்
- வயிற்றுப்போக்கு

பின்வரும் பாதிப்புகள் இருந்தால், மருத்துவரை உடனே அழையுங்கள்:

- தோல் அல்லது வாயில் புண்கள் தோன்றுதல்
- காய்ச்சல்
- தோல் அல்லது கண்கள் மஞ்சள் நிறமாகுதல்

### எதம்புடோல் (Ethambutol):

எதம்புடோல் பொதுவாக பக்க-விளைவுகளை ஏற்படுத்தாது என்றாலும், சில வேளைகளில் அவை ஏற்படலாம். பின்வரும் பாதிப்புகள் கடுமையாகவும் நீங்காமலும் இருந்தால் மருத்துவரிடம் கூறுங்கள் :

- வயிற்றுக் கோளாறு
- வாந்தி

பின்வரும் பாதிப்புகள் இருந்தால், மருத்துவரை உடனே அழையுங்கள்:

- பார்வை மங்குதல்
- சிவப்பு மற்றும் பச்சை நிறங்களைப் பார்க்க முடியாமை
- பார்வையில் திடீர் மாற்றங்கள்

## நான் எடுக்க வேண்டிய **முன்னெச்சரிக்கைகள்** யாவை?

காசநோய்-எதிர்ப்பு மருந்துகளை எடுப்பதற்கு முன்னால்,

- வேறு எந்த மருந்துக்காவது ஒவ்வாமை இருந்தால், அதை மருத்துவர் அல்லது மருந்தாளரிடம் தெரிவியுங்கள்.
- மருத்துவர் எழுதிக் கொடுத்த மருந்துகள், அல்லது நீங்களாகவே உட்கொண்டு வரும் மருந்துகள் இருந்தால், மருத்துவர் அல்லது மருந்தாளரிடம் தெரிவியுங்கள்.
- நீங்கள் கர்ப்பமாக இருந்தால், கர்ப்பமடையத் திட்டமிட்டால், அல்லது தாய்ப்பால் கொடுத்து வந்தால், அதை மருத்துவரிடம் தெரிவியுங்கள்.
- உங்களுக்கு கல்லீரல் நோய் இருந்தால், அல்லது இதற்கு முன்பு இருந்திருந்தால், அதை மருத்துவரிடம் தெரிவியுங்கள்.

### பைரசினமைட் (Pyrazinamide):

பைரசினமைட் எடுப்பதற்கு முன்னால்,

- உங்களுக்கு மூட்டு வீக்கம், கல்லீரல் நோய், சிறுநீரக நோய் அல்லது நீரிழிவு நோய் இருந்தால், அல்லது முன்பு இருந்திருந்தால், மருத்துவரிடம் தெரிவியுங்கள்.
- இந்த மருந்து, கீட்டோன் (ketone) பரிசோதனையில், சிறுநீரில் கீட்டோன் இருப்பதாகத் தவறாகக் காட்டலாம். உங்களின் உணவுப் பழக்கத்தை அல்லது நீரிழிவு மருந்து அளவுகளை மாற்றுவதற்கு முன்னால் மருத்துவரிடம் கேட்டறியுங்கள்.
- சூரிய ஒளியில் தேவையில்லாமல் அதிக நேரம் நிற்காதீர்கள். பாதுகாப்பு உடைகள், கறுப்புக் கண்ணாடிகள், மற்றும் சூரியக்கதிர்த் தடுப்பு களிம்புகள் பயன்படுத்துங்கள். பைரசினமைட் சூரிய ஒளியில் உங்கள் தோலைப் பாதிப்படையச் செய்யலாம்.